இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

# 1991 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வை (திருத்தச்) சட்டம்

*[1991, யூலை மாதம் 5 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

*1991, யூலை மாதம் 5 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 90 தபாற் செலவு : ரூபா 1.00

**1991 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வை (திருத்தச்) சட்டம்**

[1991 ஆம் ஆண்டு யூலை மாதம் 05 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ. ஒ—107/90

**1982 ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க, முத்திரைத் தீர்வைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:—

**சுருக்கப் பெயர்.**

**1.** இச்சட்டம், 1991 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

**1982ஆம் ஆண்டின் 43ஆம் இலக்கச் சட்டத்தின் 2ஆம் பிரிவைத் திருத்துதல்.**

**2.** 1988ஆம் ஆண்டின் 71ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும் 1982ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க, முத்திரைத் தீர்வைச் சட்டத்தின் 2ஆம் பிரிவு இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் "ஒவ்வொன்றின்மீதும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஒவ்வொன்றின்மீதும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்

(2) அந்தப் பிரிவின் பந்தி (ஈ) என்பதனை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(உ) பணத்தை மீளப் பெறுவதற்காக அல்லது கைமாற்றுவதற்காக, ஆளொருவர் இலங்கையிலுள்ள ஏதேனும் வங்கியுடன் செய்து கொண்ட ஏதேனும் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட ஆவணம் ஒவ்வொன்றின்மீதும்,".

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 5ஆம் பிரிவைத் திருத்துதல்.**

**3.** ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்தெட்டாம் ஆண்டின் 91ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 5ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (8)ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(8அ) ஆளொருவரின் பெயரிலுள்ள கணக்கொன்றிலிருந்து அத்தகைய வங்கியில் அதே ஆளின் பெயரிலுள்ள வேறொரு கணக்குப் பணத்தை மாற்றுவதற்காகச் செய்துகொள்ளப்பட்டதொரு கொடுக்கல்வாங்கல் தொடர்பிலான ஆவணம்;"

(2) அந்தப் பிரிவின் (9) ஆம் பந்தியிலுள்ள "அரசாங்கத்தினால் அல்லது" என்னும் சொற்களுக்கு பதிலாக "பிரதிபலன் ஏற்றுக் கொள்ளப்படாதவிடத்து அரசாங்கத்தினால் அல்லது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்

(3) அந்தப் பிரிவின் (20)ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(20அ) விலைகோரிப் பெறப்பட்ட பங்குடைப் பகிரங்கக் கம்பெனி எதிலுமுள்ள ஏதேனும் பங்கு தொடர்பில் வழங்கப்பட்ட பங்குச் சான்றிதழ்;

2—டீ 013515—1,270 (05/91)

(20ஆ) விலைகோரிப் பெறப்பட்ட பங்குடைப் பகிரங்கக் கம்பெனியிலுள்ள ஏதேனும் பங்கினைக் கைமாற்றுவதற்காக நிறைவேற்றப்பட்ட சாதனம்;"

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 13ஆம் பிரிவைத் திருத்துதல்.**

4. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தெட்டாம் ஆண்டின் 71ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 13ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது:-

"(1) ஆணையாளர் தலைமை அதிபதியானவர்

(அ) காப்புறுதிப் பூட்கைகளை வழங்குகின்ற எவரேனும் ஆளுக்கு;

(ஆ) அத்தகைய வழங்குகை மூலவழங்குகை ஆயினுஞ்சரி அதிகரித்த வழங்குகையாயினுஞ்சரி தொகுதிக்கடன் தொக்கை உருவாக்கின்றதாயினுஞ்சரி அத்தகைய பங்குகளை வழங்குகின்ற ஏதேனும் கம்பெனிக்கு;

(இ) இலங்கையிற் தொழில்புரியும் ஏதேனும் வங்கிக்கு;

(ஈ) எந்த ஊழியர்கள் தங்களுக்குச் செலுத்தப்படும் கொடுப்பனவுகள் தொடர்பில் முத்திரையிடப்பட்ட பற்றுச்சீட்டுக்களைக் கொடுப்பதற்கு ஆளாகின்றனரோ அந்த ஊழியர்களுக்கு அத்தகைய கொடுப்பனவுகளைச் செய்யும் எவரேனும் தொழில்தருநருக்கு;

(உ) உயர்நீதிமன்றத்தின், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின், மேல்நீதிமன்றத்தின், மாவட்ட நீதிமன்றத்தின் அல்லது சட்டத்தினால் உருவாக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட வேறேதேனும் நீதிமன்றத்தின் எவரேனும் அலுவலருக்கு;

(ஊ) ஓர் உரிமைக்கோரிக்கையை, கேள்வியை அல்லது வேண்டுகோளை முன்வைப்பதன்மேல் கொடுப்பனவைச் செய்கின்ற ஏதேனும் கொடுகடன் அட்டைக் கம்பெனிக்கு;

(எ) பயணிகள் காசோலையைக் காசாக்கும் ஏதேனும் நிறுவனத்திற்கு;

(ஏ) இச்சட்டத்தினால் விதித்துரைக்கப்பட்ட நேரத்தில் அல்லது முறையில் ஒரு வகுதியைச் சேர்ந்த சாதனங்களுக்கு முத்திரையில், எது சாத்தியமல்ல அல்லது உசிதமல்ல என்ற நிகழ்வைக் கருத்திற்கொண்டு அவ்வகுதியைச் சேர்ந்த சாதனங்களை வழங்கும் வேறு எவரேனும் ஆளுக்கு;

விடயத்துக்கேற்றாற்போன்று, அத்தகைய ஆளினால் வழங்கப்பட்ட காப்புறுதிப் பூட்கைமீது, அல்லது அத்தகைய கம்பெனியால் வழங்கப்பட்ட பங்குகள்மீது, அல்லது தொகுதிக்கடன் தொக்குமீது அல்லது அத்தகைய வங்கியால் வழங்கப்பட்ட காசோலைப் படிவங்கள்மீது அல்லது பணத்தை மீளப் பெறுவதற்காக அல்லது கைமாற்றுவதற்காக, அத்தகைய வங்கியுடன் ஆளொருவர் செய்துகொண்ட ஏதேனும் கொடுக்கல் வாங்கல்

தொடர்பிலான ஆவணங்கள்மீது அல்லது ஊழியர்களால் அத்தகைய தொழில் தருநருக்கும் கொடுக்கப்பட்ட பற்றுச் சீட்டுக்கள்மீது, அல்லது அத்தகைய நீதிமன்றத்தில் கொடுக்கப் பட்ட குடியியல் அல்லது கடலாண்மை வழக்கு நடவடிக்கைகள் எவற்றிலும் முன்வைக்கப்பட்ட பற்றுச்சீட்டுக்கள்மீது, அல்லது அத்தகைய கோப்பிடப்பட்ட ஆவணங்கள் மீது அல்லது அத் தகைய கடன் அட்டைக் கம்பெனியில் முன்வைக்கப்பட்ட ஏதேனும் உரிமைக் கோரிக்கை, கேள்வி அல்லது வேண்டுகோள் என்பனமீது அல்லது அத்தகைய நிறுவனத்தால் காசாக்கப் பட்ட பயணிகள் காசோலைகள் மீது அல்லது அத்தகைய வேறு ஆளினால் வழங்கப்பட்ட சாதனங்கள்மீது, கொடுபடற்பாலதான முத்திரைத் தீர்வைக் கொடுப்பனவுக்காக பின்வரும் எல்லா நிபந்தனைகள்மீதும் அல்லது அவற்றுள் ஏதேனும் ஒன்றின் மீதும், இணங்குவதற்கு அதிகாரமளிக்கலாம்:—

(i) விடயத்துக்கேற்றுற்போன்று அத்தகைய ஆள், கம்பெனி, வங்கி, தொழில்தருநர், அலுவலர், கடன் அட்டைக் கம் பெனி, நிறுவனம் அல்லது வேறு ஆள் பொருளளவில் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் ஆணையாளர் தலைமை யதிபதியுடன் முறியொன்றைச் செய்துகொள்ள வேண் டும்;

(ii) விடயத்துக்கேற்றுற்போன்று, அத்தகைய ஆள், கம்பெனி, வங்கி, தொழில்தருநர், அலுவலர், கடன் அட்டைக் கம்பெனி, நிறுவனம் அல்லது வேறு ஆள், அத்தகைய ஆளினால் வழங்கப்பட்ட காப்புறுதிப் பூட்கைகளின் அல்லது அத்தகைய கம்பெனியால் வழங்கப்பட்ட பங்கு களின் அல்லது தொகுதிக்கடன் தொக்குகளின் அல்லது அத்தகைய வங்கியால் வழங்கப்பட்ட காசோலைப் படி வங்களின் அல்லது வங்கியுடன் செய்யப்பட்ட பணத்தை மீளப் பெறுவதற்காக அல்லது கைமாற்றுவதற்காக இலங்கையிலுள்ள ஏதேனும் வங்கியுடன் ஆளொருவர் செய்துகொண்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் அல்லது அத்தகைய ஊழியர்களின் அல்லது அத்தகைய நீதிமன்றத்திலான தொடுக்கப்பட்ட குடியியல் அல்லது கடலாண்மை வழக்கு நடவடிக்கைகளில் முன் வைக்கப்பட்ட அல்லது கோப்பிடப்பட்ட ஆவணங்களின் அல்லது அத்தகைய கடன் அட்டைக் கம்பெனிக்கு முன் வைக்கப்பட்ட உரிமைக் கோரிக்கையின், கேள்வியின் அல்லது வேண்டுகோளின் அல்லது அத்தகைய நிறுவனங் களினால் காசாக்கப்பட்ட பயணிகள் காசோலைகளில் அல்லது அத்தகைய வேறு ஆட்களினால் வழங்கப்பட்ட சாதனங்களின் பதிவேடொன்றைப் பேணுதல் வேண்டும்;

(iii) விடயத்துக்கேற்றுற்போன்று, அத்தகைய ஆள், கம் பெனி, வங்கி, தொழில் தருநர், அலுவலர், கடன் அட் டைக் கம்பெனி, நிறுவனம் அல்லது வேறு ஆள், ஆணை யாளர் தலைமையதிபதியால் குறித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய காலப்பகுதிகளின் முடிவில் விடயத் துக்கேற்றுற்போன்று;

(அ) அத்தகைய ஆளினல் வழங்கப்பட்ட காப்புறுதிப் பூட்கைகள்மீது;

(ஆ) அத்தகைய கம்பெனியால் வழங்கப்பட்ட பங்குகள் அல்லது தொகுதிக்கடன் முறித் தொக்கு மீது;

(இ) அத்தகைய வங்கியால் வழங்கப்பட்ட காசோலைப் படிவங்கள்மீது, அல்லது பணத்தை மீளப் பெறுவதற்காக அல்லது கைமாற்றுவதற்காக அத்தகைய வங்கியுடன் எவரேனும் ஆள் செய்து கொண்ட எவையேனும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலான ஆவணங்கள்மீது;

(ஈ) அத்தகைய ஊழியர்களால் வழங்கப்பட்ட பற்றுச் சீட்டுக்கள்மீது;

(உ) எந்த நீதிமன்றத்திற்கு அத்தகைய அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளாரோ அந்த நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட குடியியல் அல்லது கடலாண்மை வழக்கு நடவடிக்கைகளில் முன்வைக்கப்பட்ட அல்லது கோப்பிடப்பட்ட ஆவணங்கள்மீது, அல்லது

(ஊ) அத்தகைய கடன் அட்டைக் கம்பெனிக்கு முன் வைக்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகள், கேள்விகள், அல்லது வேண்டுகோள் என்பன மீது;

(எ) அத்தகைய நிறுவனத்தால் காசாக்கப்பட்ட பயணிகள் காசோலைகள்மீது, அல்லது

(ஏ) அந்தக் காலப்பகுதியின்போது அத்தகைய வேறு ஆளினல் வழங்கப்பட்ட சாதனம்மீது,

கொடுபட்ற்பாலதான மொத்த முத்திரைத் தீர்வையை ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

இந்த உட்பிரிவின் நோக்கத்துக்காக "நிறுவனம்" என்பது, பணச் சட்டத்தினல் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியால், பயணிகள் காசோலைகளைக் காசாக்குவதற்கென அதிகாரமளிக்கப்பட்டவரான ஓர் ஆள் அல்லது ஆட்கள் குழுவொன்று என்று பொருளாகும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 54 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 54 ஆம் பிரிவானது அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) பந்தி (ஈ)யில் 'முத்திரையொன்று பயன்படுத்தப்பட்டுள்ளவிடத்து' என்னும் சொற்களுக்குப்பதிலாக 'முத்திரையொன்று பயன்படுத்தப்பட்டுள்ளவிடத்து' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (ஈ) எனும் பந்தியினை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியினைச் சேர்ப்பதன்மூலமும்:—

"(உ) எத்தன்மையதுமான ஏதேனும் முறையில் பயன்படுத்தப் பட்டிராத நாணயக் கடிதமொன்றுக்காகச் செய்யப் பட்ட, முறையாக முத்திரையிடப்பட்ட விண்ணப்பத் தைத் தொடர்ந்து, நாணயக் கடிதம் ஒன்று வழங்கப் பட்டவிடத்து,"

முதன்மைச் சட்டவாக்கத் தின் 71 ஆம் பிரிவைத் திருத்துதல்.

6. ஆயிரத்துத்தொளாயிரத்து எண்பத்தியெட்டாம் ஆண்டின் 71 ஆம் இலக்கச் சட்டத்தில் திருத்தப்பட்டவாறுன முதன்மைச் சட்டவாக்கத் தின் 71 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படு கின்றது:—

(1) "அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி" என்னும் வரைவிலக்கணத்தில் அதற்கான (1) ஆம் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியினை இடுவதன்மூலம்:—

"(2) அதிகாரமளிப்பில் குறித்துரைக்கப்பட்டவாறுன அத் தகைய கருமங்கள் தொடர்பில் இச்சட்டத்தின் நோக்கங் களுக்காக அத்தகைய ஆளின் சார்பில் செயலாற்றுவ தற்கு காலத்திற்குக்காலம் ஏதேனும் ஆளினுல் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்டவரும் அத்துடன்—

(i) ஆணையாளர் தலைமையதிபதியினுல் அங்கீகரிக்கப் பட்ட கம்பெனிகள் (கணக்காய்வாளர்கள்) ஒழுங்கு விதிகளின்கீழ் கணக்காய்வாளர் ஒருவராகப் பதிவு செய்யப்பட்ட தனியாள் ஒருவராகவும்; அல்லது

(ii) அதன் சார்பில் செய்யப்பட்ட ஒழுங்குவிதிகளின்கீழ் ஆணையாளர் தலைமையதிபதியினுல் அங்கீகரிக்கப் பட்ட தனியாள் ஒருவராகவும்;

இருக்கின்ற எவரேனும் தனியாள் என்று பொருள்படும்;

(2) "உரித்துமாற்றம்" என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன் மூலம்:—

"கடன் அட்டை" என்பது எவரேனும் வணிகரிடமிருந்து ஏதேனும் பண்டங்களை அல்லது சேவைகளை கடன்மீது கொள்வனவு செய்வதற்கு ஏதேனும் கடன் அட்டைக் கம்பெனியினுல் எவரேனும் ஆளுக்கு வழங்கப்பட்ட ஓர் அதிகாரவளிப்பு என்று பொருள்படும்;

"கடன் அட்டைக் கம்பெனி" என்பது கம்பெனியால் வழங்கப்பட்ட ஏதேனும் கொடுகடன் அட்டை வைத்தி ருப்பவருக்கு கடன் மீதும், அத்தகைய கடன் அட்டை யின் அதிகாரத்தின் மீதும் வணிகர் ஒருவரினுல் விநியோ கிக்கப்பட்ட பண்டங்களுக்கு அல்லது சேவைகளுக்கு கொடுப்பனவுகளைச் செய்யும் ஏதேனும் கம்பெனி என்று பொருள்படும்.

(3) "ஆவணம்" என்பதன் வரைவிலக்கணத்திற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும்:—

(அ) ஏதேனும் நீதிமன்றத்திலான சட்டவழக்கு நடவடிக்கைகள் தொடர்பிலான ஆவணம் என்பது அற்றோணியின் நியமனத்தை, பிராது, மறுமொழி பதிலுரை அல்லது வேறு வழக்குரை, மனு, விண்ணப்பம், சத்தியக்கடதாசி, நியமனக்கட்டளைத் தீர்ப்பு, தீர்வை ஏதேனும் விவரணத்தினதான கட்டளை அளிப்பு, ஆணை, எழுத்தாணை, ஆணை பொருட்பட்டியல் கணக்கு, விதிப்பாணை முறி அல்லது பிணைமுறை நீதிமன்ற அழைப்பாணை, பிரேரணை தவிர்ந்த விண்ணப்பம் வினாக்கொத்துக்கான, வினாக்கொத்துக்களுக்கான மறுமொழி மேன்முறையீடுபற்றிய அறிவித்தல், செலவுப்பட்டியல், ஆணை தடைக்கட்டளை அல்லது அறிவித்தல் தவிர்ந்த விண்ணப்பம் என்று பொருள்படும்; அத்துடன்

(ஆ) பணத்தை மீளப்பெறுவதற்காக அல்லது அதன் கைம்மாற்றத்திற்காக இலங்கையில் உள்ள ஏதேனும் வங்கியுடன் ஆளெவரும் செய்துகொண்ட ஏதேனும் கொடுக்கல் வாங்கல் தொடர்பிலான ஆவணம் என்பது அத்தகைய வங்கிக்கு அளிக்கப்பட்டதும் வங்கியால் செயற்படுத்தப்பட்டதுமான அறிவுறுத்தல், கட்டளை அல்லது பணக்கட்டளை ஒவ்வொன்றும் (அத்தகைய அறிவுறுத்தல் கட்டளை அல்லது பணக்கட்டளை எழுதப்பட்டதாயினுஞ்சரி அல்லது காந்த அல்லது இலத்திரனியல் அல்லது வேறு ஊடகமூலமாயினுஞ்சரி) (அத்தகைய ஆள் அத்தகைய வங்கியில் வைத்திருக்கின்ற ஏதேனும் கணக்கின் மீது வரையப்பட்ட காசோலையொன்று விடுவிக்கப்படுகின்றதான வழிகள் மூலம்) என்று பொருள்படும்

(4) "பகிரங்கக் கூட்டுத்தாபனம்" என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்து பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும்:—

"விலைகோரிப் பெறப்பட்ட பங்குடைய பகிரங்கக் கம்பெனி என்பது, இலங்கையில் அதன் பதிவு செய்யப்பட்ட அல்லது பிரதானமான கம்பெனியை வைத்திருன்ற அல்லது அதன் கட்டுப்பாட்டையும் தொழில் முகாமையையும் இலங்கையில் பிரயோகிக்கப்படுகின்ற அத்துடன் அதன் பங்குகள் 1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க, பிணையங்கள் பேரவைகள் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட பங்குத் தொகுதிப் பரிவர்த்தனை நிலையத்தால் வெளியிடப்பட்ட அலுவலக முறையான நிரல் எதிலும் விலைகோரப்பட்ட பங்குகளைக் கொண்டதுமான ஏதேனும் கம்பெனி என்று பொருள்படும்."

(5) "எழுதுக" என்பதன் வரைவிலக்கணத்தில் "ஒரு பொருளின் மீது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒரு பொருளின்மீது, தொகுப்பு முறையிலாயினுஞ்சரி அல்லது வகையிலாயினுஞ்சரி" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

**கடந்த காலத்தை உள்ளடக்கும் பயன்.**

7. (1) இச்சட்டத்தின் 3 (3) ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவிற்குச் செய்யப்பட்ட திருத்தமானது, எல்லா நோக்கங்களுக்காகவும் 1990, நவெம்பர் 15 ஆந் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) முதன்மைச் சட்டவாக்கத்தின் 54 ஆம் பிரிவிற்கு இச்சட்டத்தின் 5 ஆம் பிரிவால் செய்யப்பட்ட திருத்தமானது, எல்லா நோக்கங்களுக்காகவும், 1986 நவெம்பர் 12 ஆம் தேதி வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், 54 ஆம் பிரிவின்கீழ், விடுபாடொன்றுக்காக விண்ணப்பம் செய்வதற்கு உரித்துடையவரான ஆளொவ்வொருவரும், இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து மூன்று மாத காலப் பகுதியொன்றுக்குள்ளாக அத்தகைய விண்ணப்பத்தைச் செய்தால், அந்தப் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுடன் இணங்கியொழுகியுள்ளார் எனக் கருதப்படுதலும் வேண்டும்.

**ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.**

8. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.